**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8075839

C

1. District மாவட்டம் : கடலூர் PS: ஊ.த.க. பிரிவு காவல்நிலையம் Year ஆண்டு 2021 FIR No முதஅ. எண் 07/2021 Date நாள் 03.09.2021

2. (i) Act சட்டம்: Indian Penal Code — Sections பிரிவுகள்: 167, 468, 471, 420, 409,
(ii) Act சட்டம்: The Prevention of Corruption — Sections பிரிவுகள்: r/w 109
(iii) Act சட்டம்: Act 1988 — Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(c)
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 2011 — Date to : நாள் வரை 2015
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.06.2018 — Time : நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — சுமார் 40 கி.மீ. தென்மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி — கொத்தவாச்சேரி கிராமம், குறிஞ்சிப்பாடி வட்டம், கடலூர் மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -- District : --
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S.மாலா — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சேகர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் --- — Place of Issue : வழங்கப்பட்ட இடம் ---
(f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர், — (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**குற்றம் சாட்டப்பட்டவர்கள் வரிசை எண் 1 முதல் 8 வரை தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

**முதல்நிலை விசாரணை நடத்தப்பட்டது. (PE 235/2018/REV/CL)**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருத்து (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

திரு.P.ஜெயராமராஜதுரை, த/பெ பெரியசாமிதுரை, கடலூர் மாவட்ட செயலாளர், அகில இந்திய சமூக சேவகர்கள் முன்னேற்ற சங்கம், மெயின்ரோடு, கீழுர் கிராமம், குறிஞ்சிபாடி தாலுக்கா, கடலூர் மாவட்டம் என்பவர் அனுப்பிய 25.06.2018 தேதியிட்ட புகாரின் பேரில், முதல்நிலை விசாரணை எண். PE.235/2018 /REV/CL நாள் 23.07.2018 ஆம் தேதி பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின் முடிவில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில், குற்ற வழக்கு பதிவு செய்ய முகாந்திரம் இருப்பது தெரிய வந்ததால், குற்றச்சாட்டில் தொடர்புடைய அரசு அலுவலர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்ய தகுந்த அலுவலரிடம் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

<u>இவ்விசாரணையின் விபரம் பின்வருமாறு :-</u>

<u>குற்றச்சாட்டு–1:</u> திரு.S.சந்தானகிருஷ்ணன், கிராம நிர்வாக அலுவலர் வழுதலாம்பட்டு,

(தொடர்ச்சி பக்கம் -4)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
S. Mala 03/09/2021

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
03.09.2021 at 17.30 hrs.

Name: பெயர் S. Mala
Rank: நிலை Inspector of police. No. எண் .........
V&AC, Cuddalore.

**பக்கம் 1–ன் தொடர்ச்சி**

**கடலூர் ஊ.த.க.பிரிவு குற்ற எண். 7/2021–ல் பக்கம் 1 வரிசை எண்.7–ல் கூறியுள்ள குற்றம் சாட்டப்பட்டவர்களின் வரிசை எண் 1 முதல் 8 வரை விவர தனித்தாள் :**

(1) S.சந்தானகிருஷ்ணன், கிராம நிர்வாக அலுவலர், வழுதலாம்பட்டு கிராமம், குறிஞ்சிப்பாடி தாலுக்கா, கடலூர் மாவட்டம், முன்னாள் கிராம நிர்வாக அலுவலர், வடக்குத்து கிராமம், குறிஞ்சிப்பாடி தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

(2) K.சிவராமன், மண்டல துணை வட்டாட்சியர், வருவாய் வட்டாட்சியர் அலுவலகம், வேப்பூர், கடலூர் மாவட்டம், முன்னாள் வருவாய் ஆய்வாளர், குறிஞ்சிப்பாடி வட்டம், கடலூர் மாவட்டம்.

(3) A.இராயப்பநாதன், உதவி விதை அலுவலர், வேதாரண்யம் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம், முன்னாள் உதவி வேளாண்மை அலுவலர், குறிஞ்சிப்பாடி வட்டம், கடலூர் மாவட்டம்.

(4) R. அமுதா, எழுத்தர், (பொறுப்பு) செயலாளர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், குண்டியமல்லூர், கடலூர் மாவட்டம்.

(5) G. கோவிந்தராஜன், த/பெ கோதண்டபாணி, ஊராட்சி செயலாளர், தையல்குணாம்பட்டினம் கிராம ஊராட்சி, குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், கடலூர் மாவட்டம்.

(6) A. சத்யா, க/பெ அன்பு, K.K. நகர், முதல் தெரு, குறிஞ்சிப்பாடி, கடலூர் மாவட்டம்.

(7) K. தேவநாதன், த/பெ கலியபெருமாள், மேட்டு தெரு, ஆடூர் அகரம், குறிஞ்சிப்பாடி தாலுக்கா, கடலூர் மாவட்டம்

(8) V.பிரித்திவிராஜ், த/பெ வைத்தியலிங்கம், மாரியம்மன் கோவில் தெரு, கொத்தவாச்சேரி, குறிஞ்சிப்பாடி தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

குறிஞ்சிப்பாடி தாலுக்கா (முன்னாள் கிராம நிர்வாக அலுவலர், வடகுத்து கிராமம், குறிஞ்சிப்பாடி தாலுக்கா) என்பவர் 2015 ஆம் வருடம் வடகிழக்கு பருவமழையினால் சேதமடைந்த, குறிஞ்சிப்பாடி தாலுக்கா, கொத்தவாச்சேரி கிராமத்தில் பயிர் நிவாரணம் வழங்கியதில் ரூ.4,61,150/– ஊழல் செய்துள்ளதாக புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது தொடர்பாக முதல் நிலை விசாரணை மேற்கொண்டதில்,

கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி வருவாய் வட்டம், கொத்தவாச்சேரி கிராமத்தில், 2015 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவ மழையால் சேதமடைந்த பயிர்களுக்கு இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டதற்கான கணக்கீட்டு பட்டியலின்படி, சிறு மற்றும் குறு விவசாயிகள் 296 பேருக்கு ரூ.15,65,245/– மற்றும் பெரு விவசாயிகள் 116 பேருக்கு ரூ.22,01,310/– (ஆக மொத்தம் ரூ.37,66,555/–) நிவாரண தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த தொகையானது குண்டியமல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நிவாரண பட்டியலின்படி, கீழ்கண்டவாறு நான்கு விதமாக முறைகேடுகள் நடந்துள்ளதாக தெரியவந்துள்ளது :

**இனம்– 1 :** கொத்தவாச்சேரி கிராம சர்வே எண்.64/4 ல் உள்ள 0.20.5 ஏர்ஸ் நிலத்திற்க்கு, குமாரசாமி த/பெ அருணாச்சலம் என்பவருக்கு ரூ.2,295/– மும், அவருடைய மனைவி சிவகாமி க/பெ குமாரசாமி என்பவருக்கு ரூ.2,565/–மும் நிவாரண தொகை வழங்கப்பட்டுள்ளது. *ஒரே நிலத்திற்கு இருவருக்கு நிவாரணம் வழங்கப்பட்டு அரசிற்கு ரூ.2,565/– இழப்பீடு ஏற்பட்டுள்ளது.*

**இனம்–2** : திரு.குமார் த/பெ ராமலிங்கம், நடுத் தெரு, கொத்தவாச்சேரி என்பவருக்கு கொத்தவாச்சேரி கிராம சர்வே எண்கள் 145/2, 147/3, 146/4 ஆகியவற்றில் 0.73.5 ஏர்ஸ் நிலம் உள்ளது. அவருக்கான நிவாரண தொகை ரூ.9923/– வழங்கப்படவேண்டும். ஆனால், அவருடைய நிலத்தின் பரப்பைவிட கூடுதலாக 0.16.5 ஏர்ஸ் நிலபரப்பினை சேர்த்து ரூ.12,150/–நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. *இதன் மூலம் அரசுக்கு ரூ.2,227/– இழப்பு ஏற்பட்டுள்ளது.*

<u>இனம் –3:</u> கொத்தவாச்சேரி கிராம சர்வே எண்.1 ல் உள்ள 9.23.50 ஏர்ஸ் நிலம் சிவநேசன், த/பெ சுப்புராயன் என்பவருக்கு சொந்தமானது ஆகும். சிவநேசன் என்பவர் 2008 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். அவருக்கு சொந்தமான நிலமானது விவசாயம் செய்யப்படாமல் கரம்பாக இருந்துள்ளது. ஆனால் நிவாரண பட்டியல்லில் சிவநேசன் த/பெ சுப்புராயன் என்பவருக்கு சொந்தமான சர்வே எண்.1 நிலத்தினை குறிப்பிட்டு, (1) திருமதி.சத்யா, க/பெ அன்பு, K.K. நகர், முதல் தெரு, குறிஞ்சிப்பாடி, கடலூர் மாவட்டம் என்பவருக்கு, 2.70.0 ஏர்ஸ் நிலத்திற்காக ரூ.36,450/–, (2) திரு.கோவிந்தராஜன், த/பெ கோதண்டபாணி, ஊராட்சி செயலாளர், தையல்குணாம்பட்டினம் கிராம ஊராட்சி, குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், கடலூர் மாவட்டம் என்பவருக்கு 1.80.0 ஏர்ஸ் நிலத்திற்காக ரூ.24,300/–, (3) திரு.தேவநாதன், த/பெ கலியபெருமாள், மேட்டு தெரு, ஆடூர் அகரம், குறிஞ்சிப்பாடி தாலுக்கா, கடலூர் மாவட்டம் என்பவருக்கு 4.00.0 ஏர்ஸ் நிலத்திற்காக ரூ.48,600/– நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது [நிவாரண பட்டியலில் தேவேந்திரன் த/பெ மும்முட்டியான் என பயனாளியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது, அந்த நிவாரண தொகை ரூ.48,600/–த்தை மேற்படி தேவநாதன், த/பெ கலியபெருமாள் என்பவர் குண்டியமல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் வாயிலாக முறைகேடாக பெற்றுள்ளார்]. *மேற்படி நபர்கள் தங்களுக்கு உரிமையில்லாத நிலத்திற்கு முறைகேடாக நிவாரணம் பெற்று ஆதாயம் அடைந்ததன் மூலம் அரசுக்கு ரூ.1,09,350/– இழப்பீடு ஏற்பட்டுள்ளது.*

இனம் –4 நிவாரண பட்டியலின்படி திருப்பதி பாலாஜி த/பெ அருணாச்சலம், என்பவருக்கு கொத்தவாச்சேரி கிராம சர்வே எண்கள் 114/1, 52/2, 51/2 ல் 2.85.0 ஏர்ஸ் நிலத்திற்கு ரூபாய்.38,475/– நிவாரண தொகையாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த நிவாரண தொகையினை பிரிதிவிராஜ் த/பெ வைத்தியலிங்கம் என்பவருக்கு வழங்கலாம் என்று, குற்ற அலுவலர்–1 மற்றும் குற்ற அலுவலர்–3 ஆகியோர்கள் சான்றளித்ததன் பேரில், பிரிதிவிராஜ் த/பெ வைத்தியலிங்கம் என்பவருக்கு ரூ.38,475/– வழங்கப்பட்டுள்ளது. *பிரிதிவிராஜ் என்பவர், அவருக்கு உரிமையில்லாத நிலத்திற்கு முறைகேடாக நிவாரணம் பெற்று ஆதாயம் அடைந்து அரசுக்கு ரூ.38,475/– இழப்பீடு ஏற்பட்டுள்ளது.*

இக்குற்றச்சாட்டில் சம்மந்தப்பட்ட (1) திரு.S.சந்தானகிருஷ்ணன், கிராம நிர்வாக அலுவலர், வழுதலாம்பட்டு, குறிஞ்சிப்பாடி தாலுக்கா, ( முன்னாள் கிராம நிர்வாக அலுவலர், வடக்குத்து கிராமம், 12.02.2014 முதல் 07.09.2017 வரை ) (2) திரு. K.சிவராமன், மண்டல துணை வட்டாட்சியர், வருவாய் வட்டாட்சியர் அலுவலகம், வேப்பூர், கடலூர் மாவட்டம் [ முன்னாள் வருவாய் ஆய்வாளர், குறிஞ்சிப்பாடி வட்டம், 2015 மார்ச் முதல் 2017 மார்ச் வரை] (3) திரு.A.இராயப்பநாதன், உதவி விதை அலுவலர், வேதாரண்யம் வட்டம், நாகப்பட்டினம் [முன்னாள் உதவி வேளாண்மை அலுவலர், குறிஞ்சிப்பாடி வட்டம் – 2015 ஆண்டு] (4) திருமதி.அமுதா, எழுத்தர், [பொறுப்பு செயலாளர், 2014 முதல்] தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், குண்டியமல்லூர், கடலூர் மாவட்டம் அனைவரும் சட்டப்பிரிவு 2(C) ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு சட்டம் 1988 ன் படி சம்பவ காலத்தில் பொது ஊழியர்கள் ஆவார்கள். (5) திரு.கோவிந்தராஜன், த/பெ கோதண்டபாணி, ஊராட்சி செயலாளர், தையல்குணாம்பட்டினம் கிராம ஊராட்சி, குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், கடலூர் மாவட்டம் (முறைகேடாக நிவாரண தொகையை பெற்ற அரசு ஊழியர் எனினும், இவ்வழக்கு சம்பவத்தை பொறுத்தமட்டில் பயனாளியாக மட்டுமே முறைகேட்டில் சம்மந்தப்பட்டுள்ளாரே தவிர, பொது ஊழியராக எவ்வித செயலிலும் ஈடுபடாததால் அவர் தனிநபர் ) (6) திருமதி.சத்யா, க/பெ அன்பு, K.K. நகர், முதல் தெரு, குறிஞ்சிப்பாடி, கடலூர் மாவட்டம் (7) திரு.தேவநாதன், த/பெ கலியபெருமாள், மேட்டு தெரு, ஆடூர் அகரம், குறிஞ்சிப்பாடி தாலுக்கா, கடலூர் மாவட்டம் (8) திரு.பிரித்திவிராஜ், த/பெ வைத்தியலிங்கம், மாரியம்மன் கோவில் தெரு, கொத்தவாச்சேரி, குறிஞ்சிப்பாடி தாலுக்கா, கடலூர் மாவட்டம் ஆகியோர்கள் தனி நபர்கள் ஆவார்கள்.

குற்ற அலுவலர் 1 மற்றும் 3 ஆகிய இருவரும், நிவாரண பட்டியலை தயார் செய்யும் போது, நிலத்திற்கு உரிமையில்லாதவர்களை பயனாளியாக சேர்த்து பொய்யான ஆவணம் யார் செய்து அதனை உண்மையான ஆவணம் போல் பயன்படுத்தியுள்ளனர். குற்ற அலுவலர்–2, நிவாரண பட்டியலை சரிவர ஆய்வு செய்யாமல், நிலத்திற்கு உரிமையில்லாதவர்கள் நிவாரண தொகையை பெற பரிந்துரை செய்து அனுப்பியுள்ளார். குற்ற அலுவலர்–4, நிவாரண பட்டியலில் பயனாளியின் பெயர் தேவேந்திரன் த/பெ

மும்முட்டியான் என குறிப்பிடப்பிடப்பட்டுள்ளபோது, தேவநாதன் த/பெ கலியபெருமாள் என்பவருக்கு நிவாரண தொகையை வழங்கி குற்றம் இழைத்துள்ளார் என தெரிய வருவதால், குற்ற அலுவலர்கள் 1 to 4 மீது சட்டப்பிரிவுகள் 167, 468, 471, 420, 409 IPC and 13(2) r/w 13(1)(c) of The Prevention of Corruption Act 1988 ன்படியும்,

எதிரிகள் 5 முதல் 8 வரை உள்ளவர்கள், அவர்களுக்கு உரிமையில்லாத நிலத்திற்கு அரசால் வழங்கப்பட்ட நிவாரண தொகையை முறைகேடாக பெற்று ஆதாயம் அடைந்தும், அரசு ஊழியர்களின் குற்றமுறு நடவடிக்கைக்கு உடந்தையான செயல்பட்டுள்ளதனால், அவர்கள் மீது சட்டப்பிரிவுகள் 420 IPC மற்றும் 167 r/w 109, 468 r/w 109, 471 r/w 109, 409 r/w 109 IPC and 13(2) r/w 13(1)(c) of The Prevention of Corruption Act 1988 r/w 109 ன்படியும் வழக்கு பதியப்படுகிறது.

மேலும் புகார்தாரரின் புகார் மனுவில் கீழ்காணும் குற்றச்சாட்டுகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன. குற்றச்சாட்டு – 2 : திரு.சந்தானகிருஷ்ணன், கிராம நிர்வாக அலுவலர், வழுதலாம்பட்டு, குறிஞ்சிப்பாடி தாலுக்கா ( முன்னாள் கிராம நிர்வாக அலுவலர், கீழூர் கிராமம், குறிஞ்சிப்பாடி தாலுக்கா ) என்பவர் 2011 ஆம் வருடம் தானே புயலின் போது கீழூர் கிராமத்தில் வீடுகள் சேதமடைந்ததற்காக அரசால் நிவாரணம் வழங்கப்பட்டத்தில் ரூ.33,55,000/– முறைகேடு செய்துள்ளதாக குற்றச்சாட்டு.

<u>குற்றச்சாட்டு – 3 :</u> திரு.S.சந்தானகிருஷ்ணன், கிராம நிர்வாக அலுவலர் வடக்குத்து கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது, 2015–வடகிழக்கு பருவமழையால் வடக்குத்து கிராமத்தில் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு நிவாரணம் வழங்கியதில் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் ஊழல் செய்துள்ளதாக குற்றச்சாட்டு.

மேற்கூறிய மூன்றாவது குற்றச்சாட்டில் பயனாளிகளின் கைவிரல் ரேகைகளை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி அறிக்கை பெற மிகவும் காலதாமதம் ஏற்படும் என்பதாலும் இந்த முதல் நிலை விசாரணையில் பிடிக்க கூடிய குற்றத்திற்கான சந்தேகம் ஏற்பட்டுள்ளதால் முதல் தகவல் அறிக்கை பதிந்த பின்னர் விசாரணை மேற்கொள்வதற்கு உகந்தது. அதுபோல் இரண்டாவது குற்றச்சாட்டு தொடர்பான ஆவணங்கள் கிடைக்கப் பெறாததால் இந்த முதல் நிலை விசாரணையில் விசாரிக்க இயலவில்லை. எனினும் முதல்

தகவல் அறிக்கை பதிந்த பின்னர் அது குறித்து முழுமையாக விசாரணை மேற்கொள்ள உகந்ததாகும்.

மேற்கூறிய சங்கதிகள் பிடிக்கக் கூடிய குற்றங்களாகிய ஆவணத்தை தவறாக உருவாக்குவது, பிறரை வஞ்சிக்க பொய்யான ஆவணம் புனைதல், பொய்யாக புனைந்த ஆவணத்தை நேர்மையன்றி உண்மையான ஆவணம் போல் பயன்படுத்துதல், ஏமாற்றி சொத்தை பிறருக்கு கொடுக்கும்படி வஞ்சித்தல், பொது ஊழியர் குற்றமுறு கெட்ட நடத்தையில் ஈடுபடுவது மற்றும் மேற்கூறிய குற்றங்களை செய்வதற்கு உடந்தையாக இருத்தல் போன்ற குற்றங்கள் நடந்திருப்பதற்கான சந்தேகம் ஏற்படுத்துவதற்கான அடிப்படை ஆதாரங்கள் உள்ளது என தெரிய வருகிறது.

எனவே, நான் இன்று 03/09/2021 ஆம் தேதி 16.00 மணிக்கு, மேற்படி குற்ற அலுவலர்கள் மீது, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண். 07/2021ன் படி குற்ற அலுவலர்கள் 1 முதல் 4 க்கு எதிராக சட்டப்பிரிவுகள் 167, 468, 471, 420, 409 IPC 13(2) r/w 13(1)(c) of The Prevention of Corruption Act 1988 மற்றும் குற்ற அலுவலர்கள் 5 முதல் 8 க்கு எதிராக சட்டப்பிரிவுகள் 167 r/w 109, 468 r/w 109, 471 r/w 109, 420, 409 r/w 109 IPC and 13(2) r/w 13(1)(c) of The Prevention of Corruption Act 1988 r/w 109 IPC ன்படி வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், தலைமை குற்றவியல் நீதிதுறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி (ஊழல் தடுப்பு வழக்கு), கடலூர் அவர்களுக்கும், முதல் தகவல் அறிக்கையின் நகல் காவல் கண்காணிப்பாளர், மேற்கு சரகம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குனரகம், சென்னை அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. மற்றொரு நகல் வழக்கு கோப்பில் வைக்கப்பட்டது.

S. Chalo
3/09/2021
Inspector of police
V & AC, CUD.,